29 ஏப்ரல் 2018

# Newbec

NEW WAY OF BEING CHURCH

பாஸ்கா காலம் 5ம் ஞாயிறு

எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம்



# கிறிஸ்துவில் மீட்படைந்தோம்
# அவரில் இணைந்திருந்தால்

Image: ©123rf.com

> கிறிஸ்து அழைக்கிறார், திருச்சபைக்கு நீங்கள் தேவை, திருத்தந்தை உங்களை நம்புகிறார், உங்களிடமிருந்து மேன்மையான காரியங்களை அவர் எதிர்பார்க்கிறார்.
>
> -திருத்தந்தை 2ம் ஜோன் பவுல்

இன்றைய ஞாயிறு நற்செய்தி வாசகத்தில் "இணைந்து இருங்கள்" பலமுறை வருகின்றது. ஏதாவது ஒன்றோடு உறுதியாக, இறுதியாக, நீடித்த, நிரந்திரமாக பிடித்துக் கொள்ள அல்லது தொடர்பு கொள்ள வேண்டும் என்ற பொருளை அது தருகிறது. எளிதாக அசைக்கவோ அகற்றவோ முடியாது. ஆகவே, "என்னோடு இணைந்திருங்கள்" இயேசு கூறுவது, வாழ்வின் எந்தவொரு சூழ்நிலையிலும் சவால்மிக்க காலங்களிலும் உறுதியாக, வலுவாக, விட்டுக்கொடுக்காத உறவைப் பற்றியே.

இயேசுவோடு மேலோட்டமான உறவோடு நாம் நின்று விட்டால், இயேசுவின் பயனுள்ள சீடர்களாகும் தகுதியை இழந்து விடுகிறோம். "என்னோடு இணைந்து இராதவர் கொடியைப் போலத் தறித்து எறியப்பட்டு உலர்ந்து போவார். அக்கொடிகள் கூட்டிச் சேர்க்கப்பட்டு நெருப்பிலிட்டு எரிக்கப்படும்." திராட்சை தோட்டச் சொந்தக்காரர் கொடிகளின் பலவீனமான அல்லது பழுதடைந்த கிளைகளை கழித்துக் களை எடுப்பதை இயேசு இங்கு குறிப்பிடுகிறார். கொடியில் முக்கியமான பகுதியாக திராட்சை செழிப்பாகவும் ஆரோக்கியமாக வளர்வதற்கு இது முக்கியம். கொடியுடன் "பலவீனமான" இணைப்பைக் கொண்டிருக்கும் கிளைகள் துண்டிக்கப்படும் என்பதே இதன் பொருள்.

எனவே, நாம் கேட்க வேண்டிய கேள்வி, "எவ்வகையான உறவை இயேசுவோடு வைத்திருக்கிறோம்?" "அது வலுவானதா, உறுதியானதா, எந்த சூழ்நிலையிலும் நிலைத்து நிற்குமா?" ஆம், நமது சீடத்துவத்ததை மேலும் வலுப்படுத்த, உறுதிப்படுத்த, நிலைத்திருக்க கடவுள் கழித்து விடுவார். உங்கள் உறவு உங்களது எண்ணங்களையும் போக்கையும் உணர்வையும் பொருத்தது. பொல்லாத காலத்தில் அவர் மீது நம்பிக்கை இல்லாமல் இருந்தால், இயேசுவுடனான உங்கள் சீடத்ததுவம் பலவீனமானதாக இருக்கும்.

நாம் பயன் தரக்கூடிய ஆரோக்கியமான கிளைகளாக.. இயேசுவில் உறுதியோடு இணைத்திருக்க வேண்டுமென கடவுள் விரும்புகிறார். பெயர் அளவில் மட்டும் கிறிஸ்துவர்களாக இருப்பது மட்டும் போதாது, இயேசுவில் இணைந்திருக்கக வேண்டும். அவரது நித்திய அன்பிலிருந்து எதுவும் அசைக்கவோ பிரிக்கவோ முடியாது. **நீங்கள் உண்மையிலேயே இயேசுவில் நிலைத்திருக்கிறீர்களா?** ✝

## வாரம் ஒரு வசனம்

நீங்கள் உண்மையிலேயே இயேசுவில் நிலைத்திருக்கிறீர்களா?

INTERNAL CIRCULATION ONLY
BUL 17/2018

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

*Print:* Steno Print Sdn Bhd
*Design:* The Mustard Seed Studio

-

# மினவுதல் மாதா தேவாலயம்

85A, ஜலான் யாம் துவான், 70000 சிறம்பான்
தொ.பே : 06-762 4468 / 763 4934 / 767 7542
தொ.நகல் : 06-767 7544
Email: : serembanvisitation@gmail.com
Website: www.visitationseremban.org
பங்கு குருவானவர்: மறைதிரு. ஜோர்ஜ் ஹரிசன்
உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. அன்ட்ரு கூய்

*2018 ஆம் ஆண்டின் கருப்பொருள்:*

***எதிர்நோக்கு கொண்ட சீடர்களாகுவோம்***

*2018 ஏப்பிரல் (சித்திரை) மாதத்தின் கருப்பொருள்:*

***கிறிஸ்துவில் மீட்கப்பட்டோம்***

## *மினவுதல் தேவாலயத்தின் 170ஆம் ஆண்டை நோக்கிய பயணம்*

## *( 1848 – 2018 )*

**பங்கு அலுவலக நேரம்:**

**திங்கள் - வெள்ளி:** காலை 8.30 - மாலை 5.30
**சனி :** காலை 8.30 - மாலை 7.30
**ஞாயிறு :** காலை 8.30 - பகல் 3.00
(ஒவ்வொரு சனி, ஞாயிறு திருப்பலி நடை பெறுவதற்கு 30 நிமிடத்திற்கு முன் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும். குருவானவருக்கு நேரம் இருந்தால்)



**இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்: பாஸ்கா 5ஆம் ஞாயிறு சனி 28-04-2018 ஞாயிறு 06-05-2018**

தி.ப 9: 26-31 தி.பா 21: 26b- 27, 28, 30ab, 30c-32 1 யோவான் 3: 18-24 யோவான் 15: 1-8

**ஆண்டவரே நான் செலுத்தும் புகழ் உம்மிடமிருந்து எழுவதாக ! (தி. பா 21)**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 28 | *5.00 மா*<br>*5.30 மா*<br>*5.45 மா*<br>*6.00 மா* | செபமாலை<br>இடைவிடா சகாய அன்னை<br>நற்கருணை ஆசீர்வாதம்<br>திருப்பலி (ஆ) (புனித 2ஆம் ஜேன் போல்) | |
| ஞாயிறு | 29 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br>01.00ம | திருப்பலி (த) (புனித ஜோன் வியான்னி)<br>திருப்பலி (ஆ) (மறைக்கல்வி படிவம் 3)<br>திருப்பலி (சீனமொழி)<br>திருப்பலி (தே.மொ) | **மறைக்கல்வி (த)** காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30<br>(ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ )<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 9.00 - 10.30 (சீனம் ) |
| திங்கள் | 30 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (ஆ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| செவ் | 01 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (சீ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| புதன் | 02 | 6.45 கா | திருப்பலி | |
| வியா | 03 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (த) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| வெள் | 04 | காலை திருப்பலி நடைபெறாது | | *மா 7.30 மணி திருமணி ஆராதனையும் திருப்பலியும் (ஆ) முதல் வெள்ளிக்கிழமை* |

**பாஸ்கா 6ஆம் ஞாயிறு**

தி.ப 10: 25-26, 34-35, 44-48 தி.பா 97: 1, 2-3ab, 3cd-4 1 யோவான் 4: 7-10 யோவான் 15: 9-17

**ஆண்டவரே நான் செலுத்தும் புகழ் உம்மிடமிருந்து எழுவதாக ! (தி. பா 21)**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 05 | *5.00 மா*<br>*5.30 மா*<br>*5.45 மா*<br>*6.00 மா* | செபமாலை<br>இடைவிடா சகாய அன்னை<br>நற்கருணை ஆசீர்வாதம்<br>திருப்பலி (ஆ) (புனித 1ஆம் புருணோ) | |
| ஞாயிறு | 06 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br>01.00ம | திருப்பலி (த) (புனித மரியா)<br>திருப்பலி (ஆ) (புனித 2ஆம் புருணோ)<br>திருப்பலி (சீனமொழி)<br>திருப்பலி (தே.மொ) | **மறைக்கல்வி (த)** காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30<br>(ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ )<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 9.00 - 10.30 (சீனம் ) |

நம்முடைய மினவுதல் தேவாலயத்திற்கு வருகை தந்திருக்கும் **புதிய பங்கு மக்கள், கல்லூரி மாணவர்கள், சிரம்பான் வட்டாரத்தில் புதிதாக குடியேறியிருக்கும் சகோதர சகோதரிகள் அனைவரையும் வரவேற்கிறோம்.** உங்களுக்கு அன்னை மரியாளின் பாடல் அடங்கிய செப அட்டை வழங்கப்படும். உங்களின் பெயர்களைப் பங்கு அலுவலகத்தில் பதிந்து கொள்ளவும் அல்லது serembanvisitation@gmail.com மின்னஞ்சல் வழியாக தொடர்பு கொள்ளவும்.

இன்று திருப்பலியை சிறப்பாக வழி நடத்த உதவியவர்களுக்கும் மற்றும் திருவழிபாட்டு குழுவினருக்கு நம்முடைய மனமார்ந்த நன்றிகள்

**2018 ஏப்பிரல் (சித்திரை) மாத செய்திகள் / நிகழ்வுகள்**

**i) பங்கு ஆலய காணிக்கை;**
21/22 ஏப்பிரல் ரிம: 11,154.10 தித்தி ரிம: 47.00

இறைவன் அணைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!

**ii) ஆலயத்திலுனுள் அமைதியைக் கடைப்பிடிப்போம்:** திருப்பலிகளுக்கு இடையில் வாசகங்கள் வாசிக்கும் ஒத்திகை அனுமதிக்கப்படாது. திருப்பலிகளுக்கு மரியாதையான உடையணிந்து வருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**மரித்த ஆன்மாக்களுக்காக செபப்போம்**
அந்தோணிசாமி த/பெ செல்வம் (இறப்பு: 22/04/2018)
**முடிவில்லாத ஒளி இவர் மேல் ஒளிர்வதாக!**

- **இளைஞர்களுக்கு ஒரு உத்வேகப் பயிற்சி** - மினவுதல் மாதா தேவாலய இளைஞர்களுக்கு தங்களை ஊக்கப்படுத்திக்கொள்ள ஒரு அரிய வாய்ப்பு: நாள்:06-05-2018 மாலை 4.00 - 7.00 (அருள்தந்தையர்கள் பேட்ரிக் & யூஜின் லீ)
- **தண்ணீரின் மீது நடை: (27-29 ஏப்ரல் 2018)** இதற்காக பல வகைகளில் நிதி உதவி, மற்றும் தன்னார்வத்தோடு உதவி செய்து இதை வெற்றிகரமாக நிறைவேற உதவிய அனைவருக்கும் நம்முடைய நன்றிகள் உரித்தாகுக.
- **“ஏன் நான் ஆண்டவரே?”** சீடத்துவத்தின் மகிழ்ச்சியைக் கண்டுகொள்வோம் - மினவுதல் தேவாலயப் பங்கின் அனைத்து பொறுப்பாளர்களுக்கும் ஓர் உருவாக்கப் பயிற்சி: அதிச/சோன்/பணிக்குழுக்கள் அனைவருக்கும் இரட்சகர் சபைக் குருக்கள் விசேட பயிற்சி அளிக்கிஏறார்கள். சனிக்கிழமை 05/05/2018 காலை 9.00 - 1.00 வரை (ஆங்/தேமொ/தமிழ்/சீனம்) - மினவுதல் மாதா தேவாலய மண்டபம்
- **மரியாயின் சேனை உறுப்பினர்களுக்கு** (தமிழ் & ஆங்கிலம்) ஒரு அரிய வாய்ப்பு: **மரியாள் - சீடத்துவத்திற்கு நிறைவான முன்மாதி**ரி மே 08(செவ்வாய்) மாலை 4.00 மணி. - மே 06 (ஞாயிறு) சீனமொழி.
- **நோயாளிகள் சந்திப்பு:** மே மாதத்தின் 2 ஆவது 3 ஆவது வாரத்தில் வீடுகளில் இருக்கும் நோயாளிகளை இரட்சகர் சபைக் குருக்கள் சந்திக்கவிருக்கிறார்கள். உங்கள் குடும்பத்தில் வயதான நோயாளிகளைக் குருவானவர் சந்திக்க விரும்பினால் பங்கு அலுவலகத்தில் விரைவில் தெரியப்படுத்தவும்.

**பங்கு தூதுப்பணி**

- **அதிச இல்லங்களில் திருப்பலி அட்டவணை:**

அ) ஏப்ரல் 30 (திங்கள்): பு. அன்னம்மாள்(ராசா ஜெயா); புனித பெர்னார்ட் (ராசா ஜெயா)
பு. டேவிட் (மம்பாவ், சிரம்பான்3, போர்ட்டிக்சன் டோல்) பு.மத்தியாஸ் 2 (துவாங்கு ஜபார்)

ஆ) மே 1 (செவ்வாய்) :புனித ஜோன் வியான்னி(மம்பாவ்,சிரம்பான் 3,பு. கொல்கொத்தா திரேசா (மம்பாவ், சிரம் 3)
:புனித ஃபோஸ்டினா(மம்பாவ், சிரம் 3, பு டோமினிக் (மம்பாவ், போர்டிக்சன் டோல்,சிரம்3)

இ) மே 2 (புதன்) :பு. ஜஸ்டின் (சிரம் ஜெயா) புனித ஜோசப்(ஜலான் தோக் உங்கு)
புனித டைட்டஸ்(ரஹாங்):புனித மார்ட்டின் (ஜலான் தோக் உங்கு)

ஈ) மே 3 (வியாழன்) : புனித ஏஞ்சலா(ரஹாங்) பு. ஸ்தனிஸ்லாஸ்(ஜலான் தோக் உங்கு)
: பு. பீட்டர் (ஜலான் தோக் உங்கு) பு. பிரான்சிஸ்(ஃபோரஸ்ட் ஹைட்ஸ்)

உ) மே 4 (வெள்ளி) : புனித மைக்கல்(ஃபோரஸ்ட் ஹைட்ஸ்) புனித மேக்டலின் (ஃபோரஸ்ட் ஹைட்ஸ்)
:புனித ஹெண்றி (ஃபோரஸ்ட் ஹைட்ஸ்) புனித கிளமெண்ட் & பு.சிரில்(செனவாங்)

**கூடுதல் விவரங்களுக்கு உங்களுடைய அதிச /சோன் பொறுப்பாளர்களை தொடர்பு கொள்ளவும்.**

- **170 ஆம் ஆண்டு நிறைவுக்காக - “காபி மேசை “ நினைவுப்புத்தகம் மற்றும் வரலாற்று ஒளிவட்டு** ஆகிய தயாரிப்பில் ஈடுபடும் குழுவினர்அனைவரையும் நம் செபங்களில் ஒப்புக்கொடுப்போம் இந்தப் புத்தகத்திற்காக முன்பதிவு செய்து கொள்ளலாம். தொடர்புக்கு: ஜெரோம் 019-790 8071
- **தேர்தல் மீண்டும் வந்துவிட்டது**: கத்தோலிக்கர்களாக் நாம் வாக்களிக்க ஹெரால்ட் பத்திரிகையை (ஏப்ரல் 22, பக்கம் 4) வாசிக்கவும். நேர்மையான வாக்களிப்பு நடைபெற அனைவரும் செபிப்போம்.
  தேர்தல் நாள் 09-05-2018 (புதன்)
  உங்களுடைய வாக்களிக்கும் மையங்கள் எங்குள்ளது என்று தெரிந்துகொள்ள இந்த அகப்பகக்த்தை நாடுங்கள். htts :pengundi.spr.gov.org
- சபா சரவாக் மாநில சகோதர சகோதரிகள் உங்கள் வாக்குகளை செலுத்த அங்கு செல்ல உதவி தேவைப்பட்டால் பங்கு குருவானவரை அணுகவும்.
- நம்முடைய செபக்குழுவினரோடு செபத்தில் இணைந்திடுங்கள் (திங்கள்) ஆங்கிலம் செவ்வாய்(சீனம்) வியாழன் (தமிழ்)
- **மே 4-5 தேதிகளில் உண்ணா நோன்பும் செபமும்:** (வெள்ளி/சனி) 24 மணி நேர நற்கருணை ஆராதனை பொதுத்தேர்தலை முன்னிட்டு நடைபெறும். அனைத்து பணிக்குழுக்கள்/குழுக்களாக/ தனிநபராக் வந்து ஒரு மணி நேரம் நற்கருணை ஆண்டவரின் முன் செபத்தில் தியானிக்க உங்கள் பெயர்களைப் பதிந்து கொள்ளுங்கள். பதிவு அனைத்து திருப்பலிகளுக்குப்பின் நடைபெறும்.
- **குடும்ப வாழ்வுப் பணிக்குழு - சொற்பொழிவு** - “அவர்கள் அனைவரும் ஒன்றாய் இருப்பார்களாக! சனி 12-05-2018 காலை 10.00 எ 4 .00 வரை(ஆங்கிலம்/தேமொ/சீன்) தமிழில்: 06-05-2018 ( ஞாயிறு) பகல் 2.00 மணி
- 13-05-2018 (சனி) மாலை 5.00 மணி **வின்செண்ட் டி போல்** குழுவினரின் ஒன்றுகூடல் / இடம்: ஆலய உணவு விடுதி
- 19-05-2018 (சனி) காலை 9.00- 1.00 வரை - “**இதை என் நினைவாகச் செய்யுங்கள்**” (லூக் 22:19) அனைத்து நற்கருணைப் பணியாளர்களுக்கும் (ஆங்கிலம்/தேமொ/தமிழ்/சீனம்)
- **பெந்தகோஸ்தே திருவிழிப்பு**: 19-05-2018 (சனி) இரவு 8.00 முதல் நள்ளிரவு வரை (ஆங்கிலம்/தமிழ்/சீனம்)